25.08.2025

அ.வ.எண். 83/2020

வா.சா.1 - அன்பழகன் த/பெ. மாரப்பன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 25.08.2025 is accordance with the provision of Act X of 3331

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 1ம் பிரதிவாதி வேலுச்சாமிக்கு சுமார் 80 வயது இருக்கும். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்திற்கு வடபுறமாக குடியிருந்து வருகிறார். 1ம் பிரதிவாதி, 2018 ம் ஆண்டு முதல் எனது நிறுவனம் மீது மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் புகார் கொடுத்து வருகிறார் என்றால் சரிதான். அந்த புகாரில் எங்களது நிறுவனத்தில் சிமெண்ட் மற்றும் கிரஸர் மண் பரப்பதால் அவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் அந்த மாதிரி கொடுக்கவில்லை. வேறு என்ன புகார் கொடுத்தார் என்றால் தொழில் செய்யக்கூடாது என்று புகார் கொடுத்தார்.

2. 2018 ம் ஆண்டு முதல் கல் அடிக்கும் ஒலி மற்றும் துகள்கள் பரப்பதால் ஏற்படும் மாசுவினாலும் 1ம் பிரதிவாதிக்கும், அருகில் குடியிருப்பவர்களுக்கும் இடையூறு ஏற்படுவதாக அது சம்மந்தமாக விசாரணை செய்ய வேண்டி மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் புகார் அளித்தார் என்றால் அவ்வாறு இல்லை. நானும், பக்கத்தில் தான் குடியிருக்கிறேன். மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் புகார் நிலுவையில் உள்ளபோது, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் 1ம் பிரதிவாதி புகார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் இருந்து 07.05.2018 ம் தேதியில் வட்டார வளர்ச்சி அலுவலர் சூலூர் அவர்களுக்கு கடிதம் வழங்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதன் நகல் எனக்கும் வந்தது.

3. அந்த கடிதத்தில் HOLLOW BLOCK செய்யும் நிறுவனம் வெள்ளை நிறப் பட்டியலில் வருவதால் புகார் மனு தொடர்பாக உள்ளாட்சி நிறுவன சட்டம் 1920 மற்றும் பொது சுகாதார சட்டம் 1939 நடவடிக்கை எடுக்கும் பொருட்டு புகார் மனு அசலுடன் இணைத்து அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான். பின்னிட்டு கொரோனா காலகட்டம் என்பதால் வட்டார வளர்ச்சி அலுவலர் 2020 ம் ஆண்டில்

எனது நிறுவனத்தை பார்வையிட்டார் என்றால் இல்லை. 19.05.2020 ல் வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி மன்ற தலைவர் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பினார் என்றால் சரிதான். அந்த கடிதத்தில் "மனுதாரர் SMS HOLLOW BLOCK கல் தயாரிக்கும் நிறுவனத்திற்கு ஊராட்சி மூலம் அனுமதி (PLAN APPROVAL, LICENCE, PROFESSION TAX) வழங்கியிருப்பின் அது குறித்த விவரங்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்பக் கோரி கேட்டு கொள்கிறேன் என்றும், மேலும் SMS HOLLOW BLOCK நிறுவனம் மீது நடவடிக்கை எடுத்து தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 159, 160 அதன் விவரங்களை அனுப்பி வைக்க கேட்டுக்கொள்கிறேன்" என கண்டுள்ளது என்றால் சரிதான்.

4. அந்த கடிதத்தை ஊராட்சி மன்ற தலைவர் பெற்றுக்கொண்டு 09.06.2020 ல் எனக்கு ஒரு கடிதம் அனுப்பினார் என்றால் சரிதான். அந்த கடிதத்தில் "கோவை மாவட்டம் சூலூர் ஒன்றியம், கலங்கல் ஊராட்சி, காவேரி நகர் பகுதியில் SMS HOLLOW BLOCK நிறுவனம் இயங்கி வருகிறது, இதனால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதாக புகார் வரப்பெற்றுள்ளது. தங்களது நிறுவனத்திற்கு 1. கட்டிட வரைபட அங்கீகாரம், 2. உரிமம் கட்டணம். 3. தொழில் வரி பெறப்பட்டிருப்பின் அதன் விவரத்தினை இக்கடிதம் பெற்று மூன்று தினங்களுக்குள் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது " என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடிதம் பெற்ற மூன்று நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்தேன்.

5. நான் அவ்வாறு ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை என்றும், அதனால் 16.07.2020 ல் பஞ்சாயத்து தலைவர் அவர்கள் எனக்கு ஒரு கடிதம் அனுப்பினார் என்றால் சரிதான். அந்த கடிதத்தில் "மேற்படி தங்கள் நிறுவனத்தில் இருந்து வெளியேறும் மாசுவினால் அருகாமையில் அமைந்துள்ள குடியிருப்பு பகுதிகளில் வசித்து வரும் மக்களுக்கு உடல்நலக்கோளாறு ஏற்படுவதாக புகார் வந்துள்ளது. இதன் அடிப்படையில் தங்களின் நிறுவனத்தில் விசாரணை மேற்கொண்டபொழுது தங்கள் நிறுவனம் சூலூர் ஊராட்சி ஒன்றியத்தில் முறையான தொழில் உரிமம் பெறாமல் நடைபெறுவது தெரியவருகிறது. எனவே இதன் அடிப்படையிலும் பொது மக்களின் சுகாதார நலன் கருதியும், தங்களது நிறுவனத்தில் மேல் நடவடிக்கை

எடுக்கும்பொருட்டு இக்கடிதம் கிடைத்த 10 தினங்களுக்குள் தங்கள் நிறுவனத்தை பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வேறு இடத்திற்கு மாற்றி அமைக்கவோ (அ) நிறுவனத்தை மூடிக்கொள்ளவோ இதன் படி அறிவுறுத்தப்படுகிறது" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கடிதத்தின் நகலானது எனக்கும், வட்டார வளர்ச்சி அலுவலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது என்றால் எனக்கு வந்தது. வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டதா என்று தெரியாது.

6. மேற்படி கடிதம் வந்த உடன் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி கடிதத்தின் மீது மேல்முறையீடு செய்யாமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. அங்கு பொதுமக்கள் யாரும் இல்லை. 3 வீடுகள் தான் உள்ளது. 1 , 2 பிரதிவாதிகள், மாசு கட்டுப்பாடு வாரியத்தில் புகார் கொடுத்தது சம்மந்தமாகவும், அதை பொறுத்து BDO விசாரணை செய்தது சம்மந்தமாகவும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். 1 , 2 பிரதிவாதிகள் நான் தொழில் செய்வதை தடுக்கவில்லை என்றும், அவர்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்ட காரணத்தால் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் புகார் கொடுத்தனர் என்றால் சரியல்ல. எனக்கும், என் குடும்பத்தினருக்கோ எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. வீடு கட்டுவதற்கு உண்டான பொருட்களை தான் பயன்படுத்தி வருகிறேன்.

7. 1 , 2 பிரதிவாதிகள் நான் தொழில் செய்வதையும், வண்டி, வாகனங்கள் ஓட்டுவதை தடுப்பதாகவும் சொல்வது தவறு என்றும், அவர்கள் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் என் மீது புகார் கொடுத்ததால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 , 2 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1 , 2 பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கில் மூல காரணங்கள் மற்றும் முகாந்திரங்கள் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur